

பாமாலை 330 ஆ இயேசுவே நீர்

1 ஆ இயேசுவே நீர்
என் பலியானீர்
பாவி உம்மை அகற்ற, கல்வாரி
சென்றீர்;
மன்றாடுவீர்
இப்பாவிக்காய் நீர்;
'என்னைக் கொன்றோருக்காய்
உயிர் ஈந்தேன் ' என்பீர்

2 இறங்கிடுமேன்
அகற்றிடுமேன்
உந்தன் அன்பினால் என்தன் உட்
கடினத்தை;
சிலுவை அன்பால்
என்னை இழுத்தால்
ஆவேன் விடுதலை பாவியாம்
அடிமை .

3 கோபம் பெருமை
போக்கும் சிலுவை
அகற்றுமே தூய ரத்தமும்
தோஷத்தை;
தீய மனத்தை
பாவ பாரத்தை
அகற்றி ரத்தத்தால் சேர்த்திடும்
உம்மண்டை

4 உம் ரத்தம் என்னில்
நிலைத்திருப்பின்
ஒழிந்திடும் எப்பாவம்
பலவீனமும்
பிதாவின் முன்னர்
சகாயராம் நீர்
சுதா, பாவியேனை உம் அன்பால்
வாழ்விப்பீர்